7th November 1966]

மருத்துவ நிலைய ஊழியர்கள் சங்கம்

* 488 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் ஆஸ்பத்திரிகளின் IV Grade சிப்பந்திகளை கிரேடு உயர்வாகக் கருதும்படி, சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லா அரசினர் மருத்துவ நிலைய ஊழியர்கள் சங்கத்தினின்றும் முறையீடு ஏதேனும் சர்க்காருக்கு வந்துள்ளதா ?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Blood-banks

* 489 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Blood-banks in the State are getting depleted of sufficient quantity of blood; and

(*b*) if so, the action proposed thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) ஆம், இரத்த தானம் செய்பவர்கள் பல்வேறு மருத்துவ மனைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்போதுமான அளவுக்கு இரத்ததானம் செய்ய முன் வருவதில்லை. இரத்த தானத்தைப் பிரபலப்படுத்த எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

Regional Government Press

* 495 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state with reference to the answer given to Question No. 386 on 22nd March 1966, the number of Regional Government Printing Presses, the Government have proposed to set up after the one established at Salem and their respective proposed locations?

கனம் திரு. கோ. பூவராகன் : அதன்பின், மேலும் ஒரு கிளை அச்சகத்தை அரசாங்கம் விருத்தாசலத்தில் நிறுவியுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ராஜ்யத்தில் இதர பாகங்களில் இம்மாதிரி சர்க்கார் கிளை அச்சகங்கள் திறப்பதுபற்றி ஏதேனும் யோசனை இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : மேலும் இரண்டு இடங்களில் கிளை அச்சகங்கள் திறக்கப்படவேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தில் இருக்கிறது.